## பேருவளை நகர சபை
## களுத்துறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேருவளை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ரூபா 300,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நில சீராக்கி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 212,500 தொகையான இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் யூன் முதல் திசெம்பர் வரை இருப்பு வழங்கல்கள் ரூபா 1,823,850 இருப்புக் கணக்கில் இருந்து கழிக்கப்படுவதற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் கணக்குடன் கூட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது எதிர்வரும் ஆண்டிற்காக ஏற்கப்பட்ட செலலினத்தொகையான ரூபா 12,425 இற்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டின் கடை வாடகை வருமானத் தொகையான ரூபா 46,500 குறைவாகக் கணக்கீடு செய்யப்படுவது சீராக்கப்படுகையில் திரண்ட நிதியத்திற்கு கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக தொங்கல் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிராத நிலையான வைப்பு வட்டித் தொகையான ரூபா 35,755 வைப்புக் கணக்கிற்கும் திரண்ட நிதியக் கணக்கிற்கும் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் வைப்புக் கணக்கிற்கும் தொங்கல் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) வீதிப் பதனீட்டின் பெறுமதி முன்னைய ஆண்டின் போது மூலதனமாக்கப்படுகையில் மூலதனச் செலவினத்திற்கு வருமானத்தில் இருந்தான பங்களிப்புக் கணக்கிற்கு ரூபா 2,135,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையை சீராக்குகையில் உரிய கணக்குகளுக்கு ரூபா 1,682,822 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திற்கு தொங்கல் கணக்கின் ரூபா 10,040 தொகையான வரவு மீதி இனங்காணப்படாது திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டின் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் பெறப்பட்டிருந்த ரூபா 8,540,000 தொகையான கடன். கணக்கீடு செய்யப்படுகையில் காசுக் கணக்கும் திரண்ட நிதியக் கணக்கும் வரவு வைக்கப்பட்டு கடன் கணக்கு மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) களஞ்சியக் கொள்வனவுகளான ரூபா 32,030 தொகை, செலவினத் தலைப்பில் பதிவு செய்யப்பட்டிருந்தமையைச் சீராக்குகையில் களஞ்சியக் கணக்கு அதே பெறுமதியால் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் தொங்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டின் வியாபார அனுமதிப்பத்திர வருமானத் தொகையான ரூபா 71,141 கூடுதலாக பட்டியல் இடப்பட்டிருந்தமை மீளாய்வாண்டின் போது சீராக்கப்படுகையில் திரண்ட நிதியக் கணக்கில் இருந்து கழிக்கப்படுவதற்குப் பதிலாக தொங்கல் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 1,928,460 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,858,335 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,365,490 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 16,400 | 6,925 | 18,005 |
| (ii) | வாடகை | 12,650 | 11,501 | 1,161 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 86 | 84 | 2 |
| (iv) | ஏனைய வருமானம் | 129 | 129 | -- |

### 2.2.2 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வீதவரி மீதி ரூபா 8,613,088 தொகையானதுடன் மீளாய்வாண்டிற்கான வீதவரி ரூபா 16,400,480 ஆகப் பட்டியலிடப்பட்டிருந்தது. சபை 16 ஆண்டுகளின் பின்னர் 2013 ஆம் ஆண்டின் புதிய வீதி வரி மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வீதவரி பட்டியல் இடப்படுவது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 440 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான வீதவரி மீதி ரூபா 19,317,598 தொகையானதுடன் இதில் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 28 ஆம் திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 16,997,036 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. ரூபா 20,000 தொகையைப் பார்க்கிலும் கூடுதலான நிலுவை மீதியுடனான 49 ஆதனங்கள் காணப்பட்டதுடன் இதன் கூட்டுப் பெறுமதி ரூபா 1,778,501 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி 51 அறைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 689,244 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மேற்குறித்த கடைகளின் மாதாந்த வாடகையைக் கருத்திற்கொள்கையில் ஏறத்தாழ 3 மாதங்கள் முதல் ஒரு வருடம் வரையான காலப்பகுதிக்கு உரித்தான வாடகை நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) குத்தகை உடன்படிக்கையின் படி, தொடர்ந்து 03 மாதங்கள் குத்தகை வாடகைக் கொடுப்பனவு தவறும் பட்சத்தில் உரிய கடைகள் சபைக்குப் பொறுப்பேற்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய் போதிலும் மேற்குறித்த கடை தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடை வாடகை உடன்படிக்கைகள் 1998 இன் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 159 (ஊ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனுமோர் மத, புண்ணிய, கலாச்சாரச் செயற்பாடுகள் தொடர்பாக ஒரு ஆண்டிற்கு ஏற்கப்படும் செலவினத்தின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 5,000 ஐப் பார்க்கிலும் அதிகரித்திருப்பின் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது 2014 ஆம்

ஆண்டின் கலாச்சார விழாவிற்காக ரூபா 139,120 தொகை, சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

வீதிக்காக முதலாவது தடவையாக தார் இடப்பட்டு 2 கிழமைகளிற்குள் இரண்டாவது தடவையாக தார் இடப்பட வேண்டிய போதிலும் கங்காணங்கொட துணை வீதி, தலவகொட வீதி, ரவுன் மாவத்தை, ஸ்காகார வீதிக்காக முறையே 2014 யூலை 30, ஏப்ரல் 29, ஏப்ரல் 04, மார்ச் 03, திகதிகளில் முதலாவது தடவையாக தார் இடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினம் வரையிலும் 07 மாதங்களாக, 11 மாதங்களாக, 10 மாதங்களாக, 01 வருடகாலம் கடந்திருந்த போதிலும் இரண்டாவது தடவையாக தார் இடப்பட்டிராமை 2015 மார்ச் 19 ஆம் திகதி சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

**3.3 முகாமைத்துவ திறமையீனங்கள்**

**3.3.1 முற்பணக் கொடுப்பனவு**

2008, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே வழங்கப்பட்டிருந்த ரூபா 148,040, ரூபா 10,000, ரூபா 36,500 தொகையான முற்பணங்கள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.3.2 ஊழியர் கடன்**

சேவையை விட்டுச் சென்ற, மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற 23 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 190,807 தொகையான ஊழியர் கடன் மீதி 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு